









# Winner of Vijay TVs
## Kalakka Povathu Yaaru season 9















# Performed many TV Comedy shows















# Hosted many TV shows

















# Performed many public shows


















# Performed many public shows


















# Acted in 10 Movies and 3 Web-Series






மா.பாண்டியராஜன் படம்: ஆர்.சுரேஷ் குமார்

விகடன் TV ★★★★

# ரிஸ்க் எடுத்துதான் ஜெயிச்சேன்!



ஜெயசந்திரன், சின்னத் திரைக்கு ரொம்பவே பரிச்சயம். பரபரப்பாக நடந்துமுடிந்த விஜய் டிவியின் 'கலக்கப்போவது யாரு சீசன் – 9' நிகழ்ச்சியின் வெற்றியாளராகியிருக்கும் அவருக்கு வாழ்த்து சொல்லிவிட்டு, பேசினேன்.

**"சின்னத்திரை பிரபலமான நீங்கள், ஒரு நிகழ்ச்சியில் போட்டியாளராகப் பங்கேற்கணும்னு எதனால் முடிவு எடுத்தீங்க..?"**

"நான் ஏற்கெனவே சில சேனல்களில் சில காமெடி நிகழ்ச்சிகளில் வந்திருந்தாலும், எதிலுமே போட்டியாளராக இருந்ததில்லை. அதனால, 'கலக்கப்போவது யாரு' நிகழ்ச்சியில் போட்டியாளராகக் களமிறங்கலாம்னு முடிவு பண்ணினேன்"

**" 'புதுமுகங்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியில் நீங்கள் எப்படிக் கலந்துகொள்ளலாம்' என விமர்சனங்கள் எழுந்ததே..?"**

"என்னோட இந்த முடிவு எனக்குத்தான் பெரிய ரிஸ்க். போட்டியாளராக ஒரு நிகழ்ச்சியில் இருக்கும்போது, அதுக்கு சம்பளம் கிடைக்காது. புதுப்புது ஐடியாக்களுக்காக மெனக்கெடணும்.

பிரமாண்டமா ஆரம்பிக்கப்பட்ட இந்த சீசன், கொரோனானால அப்படியே நிறுத்தி வைக்கிற நிலைக்குப் போயிடுச்சு. மறுபடியும் ஆரம்பிக்கும்போது செட்டில் ஆடியன்ஸே இல்லை. அவங்களோட கைத்தட்டல்தான் பெரிய எனர்ஜியைக் கொடுக்கும்.

நான் ஒரு மிமிக்ரி ஆர்ட்டிஸ்ட் தான். ஆனால், 'கலக்கப்போவது யாரு' நிகழ்ச்சியில் நான் அதைப் பண்ணலை. நான் கொஞ்சம் பர்பாமென்ஸ் பண்ணுவேன் கிறதனால, இந்த நிகழ்ச்சியோட இயக்குநர் தாம்ஸன் புதுசா ஒரு விஷயத்தைப் பண்ணலாம்னு அப்சர்வேஷன் காமெடியை ட்ரை பண்ண வெச்சார். அது ஒரு சில எபிசோடுகளிலேயே ஹிட்டடிக்க ஆரம்பிச்சதும், அந்த ஜானரிலேயே புதுப் புது ஐடியாக்களாகப் பிடிச்சுப் பண்ண ஆரம்பிச்சோம். அந்த ஐடியா இப்போ என்னை டைட்டில் வின்னராகவும் மாற்றியிருக்கு. இதுக்கு முக்கிய காரணம் இயக்குநர் தாம்ஸன் மற்றும் அவரோட டீம்தான்."



ஜெயசந்திரன்

**"அடுத்து என்ன பிளான்?"**

"லாக்டௌனுக்கு முன்னாடி சில படங்களில் நடிச்சிருந்தேன். இப்போ 'கலக்கப்போவது யாரு' பார்த்ததுக்கு அப்புறம் பல பட வாய்ப்புகள் வருது. மிர்ச்சி சிவா நடிச்சு 'லொள்ளு சபா' இயக்குநர் ராம் பாலா இயக்குற, 'இடியட்' படத்துல நடிக்கிறேன். சந்தானம் சார் நடிக்கிற ஒரு படத்துக்காகவும் பேசிட்டிருக்காங்க. இன்னும் சில படங்கள் பேசிட்டிருக்காங்க. அதில் ஒரு படத்துல ஹீரோ கேரக்டருக்காகக் கேட்டிருக்காங்க பாஸ்."

வி